வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.4/2020
வழக்கு சாட்சி – அ.சா.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேதுராமன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மூர்த்தி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வெங்கடாசலபுரம் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.07.2024

**(1 முதல் 4 எதிரிகள் வழக்கில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா.1 யைத் தெரியும். எதிரிகளைத் தெரியும். இடம் சம்மந்தமாக அசா.1 சுப்புராமுக்கும், ஜெகதீசுக்கும் இ டையே வழக்கு நடந்தது. ஜெகதீஸ் சுப்புராமிடமிருந்து பவர் பத்திரம் பெற்றதாகவும், அந்த இடத்தை ஜெகதீசின் அம்மா பெயரில் முடித்துக்கொண்டதாகவும், பேசிக்கொண்டார்கள். அதற்கு பிறகு போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். மேற்படி நிலத்தில் சுப்புராம் விவசாயம் பார்த்து வந்தார் என்று எனக்குத் தெரியும். வேறு எந்த விபரமும் எனக்குத் தெரியாது.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 சுப்புராம் எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் அவர் எனக்கு உறவினர் கிடையாது. ஓரே ஊரைச் சேர்ந்தவர். பவர் எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். ஜெகதீசின் அம்மா பெயரில் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக கூறும் விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். போலிசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி நபர்களுக்குள் என்ன வரவு செலவு விபரம் இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் எதிலும் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். அசா.1 எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.